தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 180 | 4 Pages | 27.1.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 180 | 4 பக்கங்கள் | 27.1.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்**

**விளக்கம்:**
**ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில்கண்டுஉணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.**

# உங்கள் அன்பை ஏற்க அரிட்டாப்பட்டிக்கு வருகிறேன்: முதல்அமைச்சர் பதிவு

சென்னை, ஜன.27

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் உள்ள நாயக்கர்பட்டி மற்றும் அரிட்டாப்பட்டிபகுதியில்4,981.64 ஏக்கர் நிலத்தில் 'டங்ஸ்டன்' கனிமத்தை எடுப்பதற்கு ஆய்வுடன் கூடிய, சுரங்க உரிம குத்தகைக்கு மத்திய சுரங்க அமைச்சகம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஏல அறிவிப்பை வெளியிட்டது. இந்த உரிமத்தைபெறபல்வேறுநிறுவனங்கள் போட்டியிட்டநிலையில்வேதாந்தா நிறுவனத்தின் துணை நிறுவனமான இந்துஸ்தான் ஜிங் நிறுவனத்துக்கு கடந்த நவம்பர் மாதம் உரிமம் வழங்கப்பட்டது.

இந்த திட்டத்தை அரிட்டாப்பட்டி, நாயக்கர்பட்டி உள்ளிட்ட 50 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடுமையாக எதிர்த்தனர். திட்டத்தை கைவிட வேண்டும் என போராட்டங்களை நடத்தினர். 50 கிராம மக்களின் எதிர்ப்பை கருத்தில் கொண்டு, இந்த திட்டத்தை ரத்து செய்யுமாறு தமிழ்நாடு அரசும், மத்திய அரசை வலியுறுத்தியது. தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இதுதொடர்பாக கடந்த நவம்பர் மாதம் 29ந்தேதி பிரதமருக்கு கடிதம் எழுதினார்.

கடந்த 9ந்தேதி தமிழ்நாடு சட்டசபையில், 'டங்ஸ்டன்' கனிமச்சுரங்க திட்டத்தை ரத்து செய்யக்கோரி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தமிழக பா.ஜ.க.வும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக நின்றது. மாநில தலைவர் அண்ணாமலை அந்த பகுதி விவசாயிகளுடன் பேசி, திட்டத்தை ரத்து செய்ய துணை நிற்பதாக கூறினார். மத்திய சுரங்கம் மற்றும் கனிமத்துறை மந்திரி கிஷன் ரெட்டியை அண்ணாமலை தலைமையிலான குழுவினர் சந்தித்து பேசினர். அதன்பேரில் 'டங்ஸ்டன்' திட்டம்தற்காலிகமாகநிறுத்திவைக்கப்பட்டது.

ஆனால்திட்டத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கோரி கிராம மக்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். இதையடுத்து ஊர்




முக்கிய பிரமுகர்களுடன் அண்ணாமலை டெல்லியில் மத்திய மந்திரி கிஷன் ரெட்டியை மீண்டும் சந்தித்தார். அப்போது, பிரதமர் மோடியுடன் இது தொடர்பாக பேசி நல்ல முடிவை தெரிவிப்பதாக மத்திய மந்திரி கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து மத்திய அரசின் அதிகாரபூர்வ அறிவிப்புக்காக மதுரை மேலூர் பகுதி மக்கள் காத்திருந்தனர். இந்த நிலையில், 'டங்ஸ்டன்' திட்டம் ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்தது. போராட்டம் வெற்றி அடைந்ததை கொண்டாடும் வகையில் இனிப்புகளை வழங்கி கிராம மக்கள் கொண்டாடினர்.

இந்த நிலையில் டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததற்கு சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினை நேரில் சந்தித்து அரிட்டாப்பட்டி, நாயக்கர்பட்டி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர். மேலும், டங்ஸ்டன்சுரங்க திட்டம் ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து அரிட்டாப்பட்டியில் நாளை நடைபெற உள்ள பாராட்டு விழாவுக்கு வருகை தருமாறும் முதல்அமைச்சருக்கு அழைப்பு விடுத்தனர்.

இந்த நிலையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை அரிட்டாப்பட்டிக்கு செல்ல உள்ளதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாகஅவர் வெளியிட்டுள்ள பதிவில், "உங்கள் அன்பை ஏற்க நாளை அரிட்டாப்பட்டிக்கு வருகிறேன்!" என்று தெரிவித்துள்ளார்.

## அசாம்: பாதுகாப்புப்படையினர் நடத்திய சோதனையில் வெடிபொருட்கள் பறிமுதல்




கவுகாத்தி, ஜன.27

குடியரசுதினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில், குடியரசு தினத்தையொட்டி அசாம் மாநிலம் சோனித்பூரில் பாதுகாப்புப்படையினர் இன்று தீவிர சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, வனப்பகுதியில் வெடிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தீவிர சோதனை நடத்தினர். அந்த சோதனையில் 36 கையெறி குண்டுகள் உள்பட வெடிபொருட்களை பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஜம்முவில் ராணுவ முகாம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்...தேடும் பணி தீவிரம்



ஸ்ரீநகர், ஜன.27

ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தின் பத்தேதாடி கிராமத்திலுள்ளராணுவ முகாமின் மீது நேற்று இரவு பயங்கரவாதிகள் துப்பாக்கிசூடுதாக்குதல் நடத்தியுள்ளனர்.அதற்கு ராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியதில் அந்த பயங்கரவாதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ராணுவ முகாமில்தாக்குதல்நடத்திய பயங்கரவாதிகளை பிடிக்க கத்துவா மாவட்டம் முழுவதும் பாதுகாப்புப்படையினர் மற்றும் ராணுவ வீரர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவின் 76 வது குடியரசு தினம் நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளதால் ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கஞ்சா செடி வளர்க்க இமாசல பிரதேச அரசு அனுமதி



சிம்லா, ஜன.27


நாட்டில் கஞ்சா, ஹெராயின் போன்றபோதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவதாக மக்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், இமாசலபிரதேசத்தில் கஞ்சா செடிகள் வளர்க்க அம்மாநில அமைச்சரவை நேற்று ஒப்புதல்அளித்துள்ளது. அதாவது தொழில், அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக கட்டுப்பாடுகளுடன் கஞ்சா செடிகளை வளர்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முக்கிய ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு, காங்க்ரா மாவட்டம் பாலம்பூர்சவுத்ரிசர்வான்குமார்கிரிஷிவிஸ்வவித்யாலயாமற்றும்சோலன் மாவட்டம் நவுனியில் உள்ள டாக்டர் ஒய்.எஸ். பர்மர் தோட்டக்கலை பல்கலைக்கழகத்தினர் மட்டும் குறிப்பிட்ட அளவு கஞ்சா செடியை வளர்த்து கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு, தோட்டக்கலை பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றால் கூட்டாக மேற்கொள்ளப்படும். இந்த முயற்சிக்கான ஒருங்கிணைப்புத்துறையாக வேளாண் துறை நியமிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட், குஜராத், மத்தியபிரதேசம்மற்றும்ஜம்முகாஷ்மீர்போன்ற மாநிலங்களை பின்பற்றி மருத்துவ நோக்கங்களுக்காக கஞ்சா செடியை வளர்க்க அனுமதி வழங்கியதாக அந்த மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த செடி வளர்ப்பு கடுமையான கண்காணிப்பின் கீழ் இருக்கும் எனவும், மக்களுக்கு இந்த அனுமதி பொருந்தாது என அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## தாமோதரன் என்ற செஃப் தாமுவுக்கு பத்மஸ்ரீ விருது



புதுடெல்லி: ஜன.27

இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்ம விபூஷண் விருதுகளை மத்திய அரசு நேற்று அறிவித்தது.

அதில் 7 பேருக்கு பத்ம விபூஷண், 19 பேருக்கு பத்ம பூஷண் மற்றும் 113 பேருக்கு பத்ம ஸ்ரீ உள்பட மொத்தம் 139 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த அஜித்குமார், நடிகை சோபனா, தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டி ஆகியோருக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தெலுங்கு திரைப்பட நடிகரான நந்தமூரிபாலகிருஷ்ணாவுக்குபத்மபூஷண்விருதுஅறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழகத்தைச் சேர்ந்த சமையல்கலை அறிஞர் செஃப் தாமுவுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்ம விருது பெற்றவர்களை பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையில் கண்காணிப்பாளர் ஜெஸ்லின் தலைமையில் குடியரசு தின விழா கொண்டாட்டம்

★தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையில் குடியரசு தின விழா கொண்டாட்டம் மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில்,மருத்துவமனை கண்காணிப்பாளர் சிறப்பாக பணிபுரிந்த களப்பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி, குடியரசு தின விழா கொண்டாட்டம்.

தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின், கொடியேற்றி குடியரசு தின உரையாற்றினார். அவர் பேசும்போது,தென்காசி மருத்துவமனை அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி, தமிழகத்தில், அரசு மருத்துவமனைகளில் சிறப்பான உயர்ந்த இடத்தில் இருப்பதற்கு காரணமான, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பாக குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.தென்காசி மருத்துவமனையின் அனைத்து பெருமைகளுக்கும் முக்கிய காரணம் நமது மருத்துவமனை களப்பணியாளர்கள் தான். அவர்கள் தங்களது பணிகளை தொழிலாக, சுமையாக கருதாமல் சேவையாக எண்ணி பணிபுரிந்ததால் தான், நமது மருத்துவமனை இத்தகைய பெருமையை பெற்றுள்ளது என்பதை





யாராலும் மறுக்க முடியாது. அவர்களை கௌரவப்படுத்தும் விதமாக இந்த குடியரசு தின விழாவில், சிறப்பாக பணிபுரிந்த, நேரடியாகவும் மறைமுகமாகவும் தென்காசி மருத்துவமனையின் வளர்ச்சிக்கு துணைபுரிந்த, களப்பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுறது. மருத்துவர்கள், செவிலியர்கள் ,மற்றும் பணியாளர்கள் அனைவரும் திறமையாகவும், சேவை மனப்பான்மையுடன் பணியாற்றி, பொது மக்களின் நலனுக்காகவும், மருத்துவமனையின் வளர்ச்சிக்காகவும் செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். பின்னர் தென்காசி மருத்துவமனையில் சிறப்பாக பணிபுரிந்த, செவிலியர்கள், மருந்தாளுனர்கள் , ஆய்வுகள் நுட்புணர்கள், செவிலிய உதவியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், மின்சாரத்துறை ஊழியர்கள், அவசர ஊர்தி ஊழியர்கள் என மருத்துவமனையில் வளர்ச்சிக்கு நேரடியாகவும், வெளியில் இருந்தும் துணை புரிந்த சுமார் 40 பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி, மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின் கௌரவித்தார்.

செவிலியர் மாரீஸ்வரி குடியரசு தின சிறப்பு பற்றி பேசினார். மூத்த மருத்துவர் சுரேஷ் மில்லர், நலமாக பணிபுரிந்து அடைந்து பணியாளர்களுக்கும், வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக் கொண்டார். நிகழ்ச்சியில் உறைவிட மருத்துவர் செல்வ பாலா, மருத்துவர்கள் சுரேஷ்மில்லர், விஜயகுமார்,மகேஷ், கோபிகா,செவிலியர் கண்காணிப்பாளர்கள் பத்மாவதி, திருப்பதி, முத்துலட்சுமி ,மருந்தாளுனர்கள் கோமதி, லதா ,செவிலியர்கள் செந்தாமரை செல்வம், சுதா, மேகலா, கார்த்திகா,அனைத்து மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம், இ.சி.ஈ. அரசு ஆண்கள்மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற 76வது குடியரசு தின விழா நிகழ்ச்சி

தென்காசிமாவட்டம், இ.சி.ஈ. அரசுஆண்கள்மேல்நிலைப்பள்ளி மைதானத்தில்இன்று (26.01.2025) நடைபெற்ற 76வதுகுடியரசுதினவிழாநிகழ்ச்சியில்மாவட்டஆட்சித்தலைவர்திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள்தேசியக்கொடியினைஏற்றிமரியாதைசெலுத்திகாவல்துறையினரின்அணிவகுப்புமரியாதையைஏற்றுக்கொண்டார்கள். சிறப்பாகபணியாற்றியபல்வேறுதுறைகளைச்சார்ந்தஅலுவலர்கள்மற்றும்தன்னார்வலர்கள்என 319நபர்களுக்குநற்சான்றிதழ்களைதென்காசி மாவட்டகாவல்கண்காணிப்பாளர் திரு. அரவிந்த் அவர்கள்முன்னிலையில்மாவட்டஆட்சித்தலைவர்அவர்கள்வழங்கினார்கள். சுதந்திரப்போராட்டதியாகிதிரு. கி. லெட்சுமிகாந்தன்பாரதிஇ.ஆ.ப., (ஓய்வு) அவர்களுக்கு பொன்னாடைஅணிவித்துமாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள்கௌரவித்தார்.

தென்காசிமாவட்டகாவல்துறையின்அணிவகுப்புமரியாதையினை ஏற்றுக்கொண்டுபுறாக்களைபறக்கவிட்டுமூவர்ணபலூனினைவானில்பறக்கவிட்டார். காவல்துறையில்சிறப்பாகபணியாற்றிய 50 காவல்ஆளிநர்களுக்கு மாண்புமிகுதமிழகமுதலமைச்சர் அவர்களின்காவலர்பதக்கத்தினை வழங்கினார். இளைஞர்நலன்மற்றும்விளையாட்டுமேம்பாட்டுத்துறைஅலுவலகத்தின்மூலம்தேசியஅளவில்சர்வதேசவிளையாட்டுப்போட்டிகளில்வெற்றிபெற்ற 04 மாணவர்களுக்குநற்சான்றிதழ்மற்றும்பரிசுத்தொகையினையும், மாவட்டசமூகநலஅலுவலகத்தின்மூலம்கடந்தஆண்டு 10 ஆம்வகுப்புதேர்வில்சிறப்பானமதிப்பெண்பெற்றுவெற்றிபெற்ற 31 மாணவிகளுக்குபரிசுத்தொகை மற்றும்நற்சான்றிதழ்களையும், பள்ளிக்கல்வித்துறைஅலுவலகத்தின்மூலம்தேசியஅறிவியல்கருத்தரங்கில்வெற்றிபெற்ற 01 பள்ளி மாணவிக்குநற்சான்றிதழ்மற்றும் பரிசுத்தொகையினையும்என மொத்தம் 49



நபர்களுக்குக்குசிறப்புபரிசுகள்மற்றும்விருதுகளையும்,மாற்றுத்திறனாளிகள்நலத்துறையின்மூலம் 05 பயனாளிகளுக்குரூ.4,43,500/மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், வேளாண்மைமற்றும்உழவர்நலத்துறையின்மூலம்02 பயனாளிகளுக்குரூ.49,250/மதிப்பிலான நலத்திட்டங்களும், ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலத்துறையின்மூலம் 04 பயனாளிகளுக்குரூ.49,250/ மதிப்பிலானதையல் இயந்திரங்களையும் என மொத்தம் 11பயனாளிகளுக்குரூ.5.19இலட்சம் மதிப்பிலானநலத்திட்டஉதவிகளையும் மேலும், இந்நிகழ்ச்சியில்பள்ளிமாணவ, மாணவியர்களின்கண்கவர்கலைநிகழ்ச்சிகள்நடைபெற்றது. கலைநிகழ்ச்சியில்கலந்துகொண்டுவெற்றிபெற்றமாணவ மாணவிகளுக்குபரிசுகளைமாவட்டஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்,இ.ஆ.ப., அவர்கள்வழங்கினார்கள்.

தினகனி



# ஈரோடு கிழக்கு தொகுதி: பிரசாரம் மேற்கொண்ட சீமானிடம் காங்கிரஸ் கட்சியினர் வாக்குவாதம்



ஈரோடு, ஜன.27

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டதை தொடர்ந்து பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது. தி.மு.க. வேட்பாளர், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என 46 பேர் களத்தில் உள்ளனர். தேர்தலை அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடத்த தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோடு கிழக்கு தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இன்று காலை ஈரோட்டில் உள்ள முன்னாள் எம்எல்ஏ ஈவிகேஎஸ் இளங்கோவன் வீட்டுக்கு அருகே சீமான் பிரசாரம் செய்ய எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். உடனடியாக அப்பகுதிக்கு வந்த போலீசார் இரு கட்சியினரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சீமான் தொடர்ந்து பெரியார் குறித்து அவதூறு பரப்பி வருகிறார். ஈரோடு கிழக்கு தொகுதியில் அவரை பிரசாரம் செய்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று காங்கிரஸ் கட்சியினர் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேர பேச்சுவார்த்தைக்கு பின்னர் போலீசார் இரு கட்சியினரையும் சமாதானப்படுத்தி விலக்கி வைத்தனர். இதனால், அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# தமிழக காவலர்கள் 21 பேருக்கு ஜனாதிபதி விருது அறிவிப்பு



சென்னை, ஜன.27

குடியரசு தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையில் சிறப்பாக செயல்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் 2025 குடியரசு தினத்தையொட்டி, காவல்துறையில் சிறப்பாக செயல்படும் வீரதீர செயல்களுக்கான விருது, மெச்சத்தக்க சேவைக்கான விருது மற்றும் மிக சிறப்பாக செயல்படும் காவலர்களுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த காவலர்களுக்கு 746 விருதுகள் மற்றும் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை காவல் ஆய்வாளர்கள் துரைகுமார் மற்றும் ராதிகா ஆகிய இருவருக்கு, காவல்துறையில் மிக சிறப்பாக செயல்படும் காவலர்களுக்கான ஜனாதிபதியின் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழகத்தை சேர்ந்த 21 காவலர்களுக்கு ஜனாதிபதியின் மெச்சத்தக்க சேவைகளுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி காவல் கண்காணிப்பாளர்கள் ஜெயலட்சுமி, ஸ்டாலின், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் தினகரன், பிரபாகரன், இணைகாவல் கண்காணிப்பாளர் மதியழகன், கூடுதல் ஆணையர் வீரபாண்டி, இணை காவல் கண்காணிப்பாளர் பாபு உள்ளிட்ட 21 பேருக்கு ஜனாதிபதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விம்கோநகரில் அனைத்து விரைவு ரெயில்களும் நிற்கும் மண்டல குழு தலைவர் தகவல்




திருவொற்றியூர், ஜன.27

திருவொற்றியூர் மண்டல குழு கூட்டம், மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு தலைமையில் நடந்தது. இதில், மண்டல உதவி கமிஷனர் புருஷோத்தமன், உதவி வருவாய் அலுவலர் அர்ஜுனன், மண்டல நல அலுவலர் லீனா மற்றும் பிற துறை அதிகாரிகள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், 76 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சுனாமி குடியிருப்பு மற்றும் மல்லிகாபுரம் ஆரம்ப சுகாதார மையங்களை, சுகாதாரமான முறையில் பராமரித்ததற்காக, மத்திய மாநில சுகாதார துறையிடமிருந்து, பாராட்டு சான்றிதழ் பெற்றதற்கு மண்டல குழுவில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து, கவுன்சிலர்கள்கூட்டத்தில் பேசினர்.

கவுன்சிலர்களின் கேள்விக்கு பதிலளித்து மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு பேசியதாவது:

சென்னை சென்ட்ரலில் இருந்து, வடமாநிலங்களுக்கு செல்லும் மற்றும் வரும் ரெயில்கள், விம்கோநகர் ரெயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டிய ஏற்பாடுகளை, வடசென்னை எம்.பி. டாக்டர் கலாநிதி மேற்கொண்டுள்ளார். அதற்கான பணிகள் நடக்கின்றன. விரைவில் விம்கோநகரில் அனைத்து விரைவு ரெயில்களும் நிற்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# அரசுப் பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்: அண்ணாமலை



சென்னை, ஜன.27

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விழுப்புரம் மாவட்டம் பேரங்கியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில், குடிநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்யாமல் குடிநீர் அசுத்தமானதால், மாணவர்கள், அருகிலுள்ள ஆற்றங்கரையில் ஊற்றுத் தோண்டி, தண்ணீர் குடிக்க வேண்டிய அவலம் நிலவுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக, வெறும் விளம்பரங்களிலேயே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் திமுக அரசு, பள்ளிக் கல்வித்துறையை முழுவதுமாகப் புறக்கணித்திருக்கிறது. ஏழை எளிய பின்புலத்திலிருந்து வரும் மாணவர்கள் படிக்கும் அரசுப் பள்ளிகள் குறித்த அக்கறை சிறிது கூட, தமிழக அரசுக்கு இல்லை.

பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்கள், குடிநீர், கழிப்பறை, சுற்றுச்சுவர் என அடிப்படை வசதிகள் கூட முறையாக இல்லாத பள்ளிகள், என அரசுப் பள்ளிகளை முழுவதுமாக அழித்தொழித்து, திமுகவினர் நடத்தும் தனியார்ப் பள்ளிகளுக்கு உதவிக் கொண்டிருக்கிறார் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர். பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி எல்லாம் எங்கே செல்கிறது?

உடனடியாக, தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு, அடிப்படை வசதிகளைச் சரி செய்ய வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன். இல்லையேல், பாஜக சார்பாக இதனை ஒரு இயக்கமாக முன்னெடுத்து தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை தீபமலையில் அபாயகரமாக இருந்த 40 டன் ராட்சத பாறை அகற்றம்



திருவண்ணாமலை, ஜன.27

பெஞ்ஜல் புயல் காரணமாக பெய்த கனமழையால் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலையார் மலையில் பல்வேறு இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. அப்போது அண்ணாமலையார் மலை அடிவாரத்தில் உள்ள திருவண்ணாமலை வ.உ.சி. நகரில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக ஒரு வீட்டில் இருந்த 5 குழந்தைகள் உள்பட 7 பேர் மண், பாறைகளில் சிக்கி மண்ணில் புதைந்து பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் இந்த சம்பவம் நடைபெற்ற இடத்தின் அருகில் மலையில் இருந்து உருண்டு வந்த சுமார் 40 டன் எடை கொண்ட ராட்சத பாறை ஒன்று அபாயகரமான நிலையில் குடியிருப்பு பகுதியின் அருகில் நின்றது. இந்தப் பாறையை அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை வைத்தனர்.

அதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையில் திருச்சியில் இருந்து பாறை உடைக்கும் வல்லுனர்கள் குழுவினர் திருவண்ணாமலைக்கு கடந்த 22ந் தேதி வந்து அபாயகரமான நிலையில் நிற்கும் ராட்சத பாறை மட்டுமின்றி மண் சரிவின் போது வ.உ.சி. நகர் பகுதியில் மலையில் இருந்து உருண்டு வந்த பாறைகளையும் அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்த நிலையில், அபாயகரமாக இருந்த 40 டன் ராட்சத பாறையும் தற்போது முழுமையாக தகர்க்கப்பட்டது. பிரேக்கர் இயந்திரம் மூலம் பாறைகள் துண்டு துண்டாக உடைக்கப்பட்டு டிராக்டர் மூலமாக கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்று வருகிறது.

# திருச்செந்தூர் கடல் அரிப்பை தடுக்க விரைவில் பணிகள் தொடங்கப்படும்: சேகர்பாபு உறுதி






திருச்செந்தூர், ஜன.27

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு முன் அமைந்துள்ள கடற்கரையில் கடல் சீற்றத்தின் காரணமாக அரிப்பு ஏற்பட்டுள்ளது. வழக்கத்தை விட கடல் நீரும் சுமார் 50 அடி தூரத்திற்கு வெளியே வந்துள்ளது. அதேபோல் அப்பகுதியில் பாறைகளும் வெளியே தெரிகின்றன. இதனால் கோவில் முன்புள்ள கடற்கரை படிக்கட்டு பகுதியில் இருந்து கடலுக்குள் பக்தர்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடல் அரிப்பு ஏற்பட்டுள்ள பகுதியில் பாதுகாப்பு கருதி பக்தர்கள் இறங்காதவாறு தடுப்பு வேலிகள் கொண்டு பாதை அடைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் கடற்கரையில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். இந்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய கடலோர ஆராய்ச்சி மைய தலைமை விஞ்ஞானி ராமநாதன் தலைமையில் 9 பேர் கொண்ட குழுவினர் கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதியில் ஆய்வு செய்தனர். அதேபோல, திருச்செந்தூரில் கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதியில் தேசிய ஆராய்ச்சி மைய குழுவினரும் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், திருச்செந்தூர் கடல் அரிப்பை தடுக்க விரைவில் பணிகள் தொடங்கப்படும் என அமைச்சர் சேகர்பாபு உறுதியளித்துள்ளார். சென்னையில் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "திருச்செந்தூர் கடற்கரையில் ஏற்பட்டுள்ள அரிப்பை தடுப்பது குறித்து சென்னை ஐஐடி, நபார்டு, மீன்வளத்துறை உள்ளிட்ட அமைப்புகள் ஆய்வு செய்தன. கடல் அரிப்பை தடுக்க 5 அமைப்புகள் அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், 3 அறிக்கைகள் ஒத்துப்போகின்றன. 2 அமைப்புகளின் அறிக்கைகள் மாறுபடுகின்றன. இது குறித்து முதல்அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு, கடல் அரிப்பை தடுக்க விரைவில் பணிகள் தொடங்கப்படும்." என்றார்.

# போராட்டம் அறிவித்த வி.சி.க.: வேங்கைவயல் பகுதியில் போலீசார் குவிப்பு





வேங்கைவயல், ஜன.27

புதுக்கோட்டை மாவட்டம் இறையூர் வேங்கைவயல் கிராமத்தில் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் 26ம் தேதி பட்டியல் சமூக மக்கள் பயன்படுத்தும் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் மனித கழிவு கலக்கப்பட்டது. இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதை கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இது தொடர்பாக விசாரணை நடத்த காவல்துறையில் சிறப்பு புலனாய்வுக்குழு அமைக்கப்பட்டது. அதன் பின்னர் இவ்வழக்கு 2023ம் ஆண்டு சி.பி.சி.ஐ.டி. போலீசாருக்கு மாற்றப்பட்டது. வழக்கமான சட்ட நடைமுறைகளின் படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய மேலும் அவகாசம் கோரி சிபிசிஐடி போலீசார் புதுக்கோட்டை மாவட்ட எஸ்சி, எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்ட சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்த நிலையில், நேற்று திடீர் திருப்பமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வேங்கைவயலில் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட விவகாரத்தில் 3 பேருக்கு தொடர்பிருப்பதாக ஐகோர்ட்டில் தமிழக அரசு தெரிவித்தது. இதன்படி வேங்கைவயல் பகுதியைச் சேர்ந்த சுதர்சன், முத்துக்கிருஷ்ணன், முரளி ராஜா ஆகிய மூன்று பேருக்கும் இந்த விவகாரத்தில் தொடர்பிருப்பதாகவும் சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு கூறியது.

முரளி ராஜா பொய் தகவலை பரப்பியதாகவும், சுதர்சன், முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் மேல்நிலைத் தொட்டி மீது ஏறி மனிதக் கழிவை தண்ணீரில் கலந்ததாகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக, தமிழக அரசு தெரிவித்தது. சம்பவம் நடந்து சுமார் 2 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், முட்டுக்காடு ஊராட்சி தலைவரின் கணவரை பழிவாங்கும் நோக்கில் குடிநீரில் மனிதக்கழிவு கலக்கப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், இந்த வழக்கையே நீர்த்துப்போகச் செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, குடிநீர் தொட்டியில் அசுத்தம் கலக்கப்பட்டது தொடர்பாக புகார் அளித்தவர்கள் மீதே குற்றம் சாட்டியுள்ளனர். இவர்கள் உண்மைக் குற்றவாளிகள் அல்ல. உண்மையில் குடிநீர் தொட்டி ஆபரேட்டரான மாற்று சமூகத்தைச் சேர்ந்த சண்முகத்தை பணி நீக்கம் செய்ததற்கு வேங்கைவயல் கிராமத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் பஞ்சாயத்து தலைவரின் கணவரின் தூண்டுதலின்பேரில் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. ஆனால் சி.பி.சி.ஐ.டி. போலீசார் முறையாக இந்த வழக்கை புலன் விசாரணை செய்யவில்லை, ஒருநபர் ஆணையமும் இதுவரையிலும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை. எனவே, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைக்கு பதில் அளிக்க அவகாசம் வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்துநீதிபதிகள் தங்கள் உத்தரவில், சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணை நடத்தி கீழ் கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த விவகாரத்தை அரசியலாக்கக் கூடாது. குற்றப்பத்திரிகையில் அதிருப்தி இருந்தால் கீழ் கோர்ட்டை அணுகலாம். அரசு தரப்பின் அறிக்கைக்கு வருகிற மார்ச் 10ந்தேதிக்குள் மனுதாரர் பதில் அளிக்க வேண்டும். விசாரணையை மார்ச் 27ந்தேதிக்கு தள்ளிவைக்கிறோம்" என்று தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் வேங்கைவயல் விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோரி தொடர் போராட்டம் நடத்த விடுதலை சிறுத்திகள் கட்சி அறிவித்துள்ளதால் வேங்கைவயல், சுற்றுவட்டாரத்தில் 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வேங்கைவயல் கிராமத்திற்குள் நுழையும் பகுதியான வெள்ளனூரில் சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராமத்தை சுற்றி 10 சோதனை சாவடிகள் அமைத்து தீவிர கண்காணிப்பில் போலீசார் ஈடுபட்டு வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கு எதிராக, வேங்கைவயல் கிராம மக்கள் தர்ணாவில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# நெல்லை அரசு மருத்துவமனை மருத்துவர்களின் மனிதநேயமற்ற செயல் டி.டி.வி. தினகரன் கண்டனம்

சென்னை, ஜன.27

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

இறந்த தாயின் உடலை சைக்கிளில் 18கி.மீ எடுத்துச் சென்ற மகன் திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவர்களின் மனிதநேயமற்ற செயல் கடும் கண்டனத்திற்குரியது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவரின் உடலை, அவரது மகன் சைக்கிளில் 18 கிலோ மீட்டர் எடுத்துச் சென்றிருப்பதாக நாளிதழ்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உடல்நலக்குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த மூதாட்டி இறக்கும் தருவாயில் மருத்துவமனையில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியே அனுப்பி வைக்கப்பட்டதே அந்த மூதாட்டி உயிரிழப்புக்கு காரணம் என புகார் எழுந்துள்ளது.

திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கி அவர்களை குணப்படுத்த வேண்டிய மருத்துவர்களே, எதாவது காரணத்தை கூறி அவர்களை வெளியே அனுப்பி வைத்திருக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது மனிதநேயமற்ற செயலாகும்.

திருநெல்வேலி அரசு மருத்துவமனை வளாகத்தில் மூதாட்டி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி தவறிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, இதுபோன்ற செயல்கள் இனியும் தொடராத வகையில் அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் போதுமான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என சுகாதாரத்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: போலீஸ் தரப்பில் ஆஜராக 2 மூத்த வக்கீல்கள் நியமனம்



சென்னை, ஜன.27

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை மாதம் 5ந் தேதி வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை வழக்கின் விசாரணை சென்னை முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கு நேற்று நீதிபதி கார்த்திகேயன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இதுவரை தங்களுக்காக வக்கீலை நியமிக்காத 8 பேர் நேரில் ஆஜர்படுத்தப்பட்டனர். மற்றவர்கள் சிறையில் இருந்தபடி காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டனர். ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் போலீசார் தரப்பில் வாதாட மூத்த வக்கீல்கள் ஆர். ஸ்ரீனிவாஸ் மற்றும் சி. எஸ்.எஸ்.பிள்ளை ஆகியோர் சிறப்பு அரசு வக்கீல்களாக நியமிக்கப்பட்டு இருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைக்கு பின்பு, இந்த வழக்கை பிப்ரவரி 7ந் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

# சென்னையில் சாலைகள் போடும் பணி மீண்டும் தொடங்கி உள்ளது மேயர் பிரியா தகவல்



சென்னை, ஜன.27

சென்னை ஜமாலியாவில் நெகிழி குப்பையை தவிர்த்தல் குறித்தான விழிப்புணர்வு பேரணியை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி, மாணவ மாணவிகள் கலந்துகண்டு நெகிழி குப்பையை தவிர்க்க வேண்டும் என்று கையில் பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

சென்னை மாநகராட்சி மேயர்பிரியாமற்றும்அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பின்னர் நிருபர்களிடம் மேயர் பிரியா கூறியதாவது:

சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டலங்களிலும் மாசு கட்டுப்பாடுகுறித்தவிழிப்புணர்வு ஏற்படுத்துவதன் நோக்கமாக இன்றைக்கு 15 மண்டலங்களிலும் பிளாஸ்டிக்கை எப்படி தவிர்ப்பது,

அதை எப்படி ஒழிப்பது குறித்து பள்ளி மாணவர்களோடு நடைப்பயணம் துவங்கப்பட்டு இருக்கிறது.

சென்னை முழுவதுமாக 15 மண்டலங்களிலும் பேரணி தொடர்ந்து நடைபெற உள்ளது. பிளாஸ்டிக்கால் எந்த அளவு மாசு படுகிறது என்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமைநான்காவதுவாரம் இந்த பேரணி தொடர்ந்து ஆண்டு முழுவதும் நடைபெறும்.

அடுத்த தலைமுறைக்கு சமுதாயத்தை பாதுகாப்பது நம்முடைய கடமை. குப்பைகளும் எப்படி சேகரிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பிளாஸ்டிக் குப்பைகளை போடுவதற்கு மெரினா, பெசன்ட் நகர் கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் தனி குப்பை தொட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒவ்வொருவரிடமும் மாற்றம் கொண்டு வரும். தனி மனிதனின் மாற்றம் தான் சமுதாயத்தின் மாற்றமாக இருக்கும். பிளாஸ்டிக் பயன்படுத்துவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்.

சென்னை மாநகராட்சியை பொறுத்தவரையில் கடந்த ஆண்டு போடக்கூடிய சாலைகள் மழை காரணமாக சில பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய சூழல் இருந்தது. அந்த பணிகள் மீண்டும் துவக்கப்பட்டு இருக்கிறது.

எதிர்க்கட்சி கொண்டு வந்த திட்டமாக இருந்தாலும் அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று அதற்கு தனியாக நிதி ஒதுக்கி பராமரிப்பு பணிகள் நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஓசூர் முனீஸ்வர் நகரில் பெரியார் பெயர் பலகை மாற்றத்திற்கு கடும் எதிர்ப்பு



ஓசூர், ஜன.27

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ரிங் ரோடு பகுதியில் உள்ள முனீஸ்வர் நகர் சர்க்கிள் பகுதிக்கு தந்தை பெரியார் சதுக்கம் என பெயர் வைக்க ஓசூர் மாநகராட்சியில் கடந்த ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை ஏற்று தமிழக அரசுசார்பில் 22.08.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து, கடந்த 21ந்தேதி, ஓசூர் மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் சம்பந்தப்பட்ட இடத்தில் தந்தை பெரியார் சதுக்கம் என்ற பெயர் பலகையை திறந்து வைத்தனர்.

இதற்கு அந்த பகுதி பொது மக்கள் மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவித்து, நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையொட்டி முனீஸ்வர் நகர் சர்க்கிள் அருகே, ஓசூர் ஏ.எஸ்.பி. அக்ஷய் வாக்கரே தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். மேற்குமாவட்டபா.ஜ.க. தலைவர் நாகராஜ் மற்றும் நிர்வாகிகளும் விசுவ இந்து பரிஷத் அமைப்பின் மாநில துணை செயலாளர் விஷ்ணு குமார், சேலம் கோட்ட பஜ்ரங் தள்அமைப்பின்பொறுப்பாளர் தேவராஜ் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில்கலந்து கொள்ள அங்கு வந்தனர். முனீஸ்வர் நகர், வ.உ.சி. நகர் மற்றும் சுற்றுப்பகுதியை சேர்ந்த பொதுமக்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள அங்கு குவிந்தனர். இந்த நிலையில், ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார்அனுமதி மறுத்ததால், கோர்ட்டு மூலம் அனுமதி பெற்று விரைவில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப் போவதாக நாகராஜ் மற்றும் விஷ்ணுகுமார், அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் தெரிவித்தனர். மேலும், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாநகராட்சி நிர்வாகம், பெயர் மாற்ற தீர்மானத்தை வாபஸ் பெற்று முனீஸ்வரர் நகர் என்ற பெயரை சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டம் கைவிடப் பட்டதை தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதன்காரணமாகஅந்த பகுதிபரபரப்பாககாணப்பட்டது.

# திருக்காலிமேடு ஏரி குப்பை கிடங்காக மாறியது



காஞ்சிபுரம், ஜன.27

காஞ்சிபுரம் நகரில் உள்ள மிகப்பெரிய ஏரியாக திருக்காலிமேடு ஏரி விளங்குகிறது. இந்த ஏரி 100 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரியானது திருக்காலிமேடு முதல் சின்ன காஞ்சிபுரம் வரை நீண்டு பரவி காணப்படுகிறது.

சுமார்50ஆண்டுகளுக்கு முன்பு திருக்காலிமேடு, திருவீதி பள்ளம், நத்தம் பேட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட பயிர்களை இந்த ஏரி விளையவைத்தது. இதற்கிடையே காஞ்சிபுரம் வேகமாக நகரமாக வளர்ச்சி அடைந்ததால் விவசாயம் செய்வது நிறுத்தப்பட்டது. விளை நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாறின. அதன் பிறகு திருக்காலிமேடு ஏரி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. இந்த ஏரியின் அனைத்து பக்கங்களிலும்குப்பைகள் கொட்டப்படுகின்றன. இதனால் திருக்காலிமேடு ஏரி குப்பை மேடாக மாறி வருகிறது. இந்த குப்பைகள் அடிக்கடி எரிக்கப்படுவதால் அடர்ந்த புகைமூட்டம் மற்றும் காற்று மாசு ஏற்படுகிறது.

மேலும் காஞ்சிபுரம் நகரத்தில் இருந்து லாரிகளில் ஏற்றிவரும் கழிவுநீரும் இந்த ஏரியில் தான் விடப்படுகிறது. இதன் காரணமாக இந்த ஏரியில் துர்நாற்றம் வீசுகிறது. இந்த ஏரியை சுற்றி வசிப்பவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டு ஆரோக்கியம் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் இந்த ஏரிக்கு வரும் கால்வாய்கள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆக்கிரமி க்கப்பட்டுள்ளன. கால்வாய்கள் தூர்வாரப்படுவதும் இல்லை. இதனால் மழைநீர் இந்த காய்வாய்க்கு செல்ல முடியாமல் கால்வாய்களில் அடைப்புஏற்பட்டுள்ளது. எனவே மழை காலங்களில் ஏரியை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இந்த ஏரி மாசுபட்டுள்ளதால் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் இந்த ஏரியில் கருவேல மரங்களும் அதிக அளவில் இருப்பதால் புதர் மண்டி காணப்படுகிறது. காஞ்சிபுரம் நகரத்தின் மையப்பகுதியில் இருந்தாலும், இந்த ஏரி முற்றிலும் பராமரிப்பு இன்றியே காணப்படுகிறது.

இதுகுறித்து அந்த பகுதி பொதுமக்கள் கூறியதாவது:

ஒரு காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்களை விளைய வைத்த திருக்காலிமேடு ஏரி இப்போது குப்பை கிடங்காக மாறி புதர்மண்டி காணப்படுகிறது. இதனால் இந்த ஏரி மெல்ல மெல்ல மறைந்து வருகிறது.

காஞ்சிபுரம் ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறை உள்ள நகரமாக உள்ளது. மேலும் இந்த ஏரியை அழிப்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த ஏரியில் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர்கேடும் ஏற்படுகிறது.

எனவே இந்த ஏரியில் லாரிகளில் கழிவுநீர் கொண்டு வந்து கொட்டுவதையும், குப்பைகளை கொட்டுவதையும் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த ஏரியை தூர்வாரி நன்றாக பராமரிக்க வேண்டும். ஏரியை சுற்றிலும் பூங்கா அமைத்து சுற்றுலா தலமாக மாற்ற வேண்டும். இந்த பூங்கா மூலம் மாநகராட்சிக்கு வருவாய் கிடைப்பதுடன் இந்த ஏரியும் பாதுகாக்கப்படும். மேலும் காஞ்சிபுரம் நகரில் குடிநீர் பிரச்சனையும் தீரும். மழை காலங்களில் குடியிருப்புகள் வெள்ளத்தில் மிதப்பதும் தடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இதுகுறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'திருக்காலிமேடு ஏரியை சீரமைத்து அதைசுற்றி பூங்காஅமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி ஆய்வு செய்து வருகிறது' என்றார்.

# பைக்கில் மண்டை ஓடு உருவம் திருக்குறள் ஒப்புவிக்க கூறி வாலிபருக்கு நூதன தண்டனை



ஜோலார்பேட்டை, ஜன.27

திருப்பத்தூர் அடுத்த வள்ளுவர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சித்தார்த் (வயது19). இவர் தனது பைக்கை புதிய ரகத்தில் வடிவமைப்பு செய்து திருப்பத்தூர் டவுன் பகுதியில் வண்டியை ஓட்டி வந்தார்.

பைக்கின் நிறத்தை மாற்றி, புதிய தோற்றத்தை உருவாக்கியதோடு முகப்பு விளக்கு மற்றும் வாகன எண்ணில் (நம்பர் பிளேட்) மண்டை ஓடு இருப்பது போல புதிய உருவ தோற்றத்தை உருவாக்கி இருந்தார். இந்த பைக்கின் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவியது.

இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த போலீசார் பைக்கை பறிமுதல் செய்து, திருப்பத்தூர் டவுன் போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனைத் தொடர்ந்து சித்தார்த் தனது பைக்கை திரும்ப பெற திருப்பத்தூர் டவுன் போலீஸ் நிலையத்திற்கு வந்தார். அப்போது போலீசார் விசாரணை நடத்திய போது அவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பைக் ஓட்டி வந்தது தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து திருப்பத்தூர் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி சிறுவனுக்கு, திருக்குறளை எழுத்துப்பிழை இல்லாமல் கூறிவிட்டு வாகனத்தை எடுத்துச் செல்லுமாறு நூதன தண்டனை கொடுத்தார். அதன்படி சித்தார்த் திருக்குறளை போலீசாரிடம் ஒப்புவித்தார்.

பின்னர் போலீசார் சிறுவனை, இனிமேல் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வண்டியை ஓட்டக்கூடாது. இது போன்ற வடிவமைப்புகளில் வாகனங்களை மாற்றக்கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்து அனுப்பினர்.

# முல்லைப்பெரியாறு அணை கண்காணிப்புக்குழுவில் கேரள பிரதிநிதிகள் நியமனத்தை கண்டித்து விவசாயிகள் போராட்டம்

கூடலூர், ஜன.27

உச்சநீதிமன்றத்தால் முல்லைப்பெரியாறு அணையை பராமரிக்க அமைக்கப்பட்ட பழைய குழு கலைக்கப்பட்டு புதிய கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அனீஸ் ஜெயின் நியமிக்கப்பட்டார். இந்த ஆணையமே முல்லைப்பெரியாறு அணை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கவனிக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் புதிய கண்காணிப்புக்குழுவில் 2 கேரள பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியது. ஏற்கனவே முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் கேரள அரசு தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. மத்திய அரசு குழுவில் இடம் பெற்றுள்ள கேரள பிரதிநிதிகளை உடனடியாக நீக்க வேண்டும் எனக்கூறி இன்று தமிழக எல்லை பகுதியான லோயர்கேம்ப்பில் விவசாயிகள் சார்பில் மாபெரும் போராட்டம்நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர்அன்வர்பாலசிங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிறுவனர் ஈசன் முருகசாமி ஆகியோர் தலைமையில் மாபெரும் போராட்டம் நடைபெற்றது.

இதில் பல்வேறு விவசாய சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர். இது குறித்து ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறியதாவது:

மத்திய அரசு முல்லைப் பெரியாறு அணையை கண்காணிக்க புதிய தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனீஸ் ஜெயின், தமிழக அரசு சார்பில் நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் மணிவாசகன், காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் சுப்பிரமணியன் ஆகியோரும் கேரள நீர் பாசனத்துறையைச் சேர்ந்த 2 பொறியாளர்கள் இந்திய அறிவியல் கழகம் சார்பில் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அணையில் தண்ணீர் தேங்கும் பகுதி 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட பகுதியாகும். மேலும் ஏக்கருக்கு ரூ.30 வீதம் வரி, மின்சார உற்பத்தி செய்தால் தமிழக அரசு சார்பில் வரி செலுத்தப்படுகிறது. இந்த நிலையில் எதன் அடிப்படையில் புதிய கண்காணிப்புக்குழுவில் கேரளபொறியாளர் இடம் பெற முடியும்? இதனை தமிழக விவசாயிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட இடத்தில் வரும் காலங்களில் எந்த ஒரு சிறிய வேலை செய்ய வேண்டும் என்றாலும் கேரள அதிகாரிகளின்உத்தரவுக்காககாத்திருக்கவேண்டும். எனவே குழுவின்தலைவர்அனீஸ் ஜெயின், தமிழக நீர்வளத்துறை பொறியாளர்கள் மட்டும் அடங்கிய குழுவை அமைக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.

போராட்டத்தால் அப்பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

# ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு 20ந் தேதி குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் தகவல்



காஞ்சிபுரம், ஜன.27

காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வருகிற 20ந் தேதி காலை 10.30. மணிக்கு கலெக்டர் கருவூலம் மற்றும் கணக்குகள் துறை அலுவலக கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்) ஆகியோரால் நடத்தப்பட உள்ளது.

ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு ஓய்வூதியம் தொடர்பாக குறைகள் ஏதேனும் இருப்பின் அதற்கான முறையீட்டினை 3 நகல்களில் காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டருக்கு வருகிற 7ந் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம். கூட்டத்தில் முறையீடுகளை அளிக்கும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களின் சார்பாக ஒரு சங்கத்திற்கு ஒரு நிர்வாகி வீதம் கலந்து கொள்ளலாம். பெறப்படும் முறையீடுகளின் மீது மட்டுமே குறை களைவு அறிக்கையினை சம்மந்தப்பட்ட துறையிடமிருந்து பெற்று ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும்.

எனவே ஓய்வூதியர்கள் தங்களது முறையீடுகளை வருகிற 7ந் தேதி காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்த விவகாரம்: 2 போலீஸ்காரர்கள் சஸ்பெண்ட்

நெல்லை, ஜன.27

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியைசேர்ந்தவர்சைலேஷ் (வயது 42).

கடந்த 2003ம் ஆண்டு தமிழக காவல்துறையில் பணியில்சேர்ந்தசைலேஷ் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தென்காசி மாவட்டம் சிவகிரி போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தார்.

அப்போது தன்னுடன் பணியாற்றும் சிவகிரி அருகே உள்ள ஆத்துவழி கிராமத்தை சேர்ந்த செந்தில் (44) என்ற போலீஸ்காரருடன் சேர்ந்து இளம் பெண் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட இளம்பெண், புளியங்குடி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் இன்ஸ்பெக்டர் சாந்தி, போக்சோ, தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 8 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தார்.

இதனிடையே செந்தில் ஆலங்குளம் போலீஸ் நிலையத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அரவிந்த், புகாருக்குள்ளான 2 போலீஸ் காரர்களையும் கைது செய்ய உத்தரவிட்டார்.

தகவல் அறிந்து 2 பேரும் தலைமறைவான நிலையில் நாகர்கோவிலில் பதுங்கியிருந்த சைலேஷ் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு பாளை சிறையில் அடைக்கப்பட்டார்.

தொடர் விசாரணையில் வாசுதேவநல்லூர் அருகே உள்ள தேசியம்பட்டியை சேர்ந்த அரசு பஸ் டிரைவர் மோகன் (50 ) என்பவரும் அந்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது. அவரையும் போலீசார் கைது செய்த நிலையில், தலைமறைவாக உள்ள போலீஸ்காரர் செந்திலை வலைவீசி தேடி வருகின்றனர்.

இதனிடையே போலீஸ் சூப்பிரண்டு அரவிந்த், போலீஸ்காரர்கள் 2 பேரையும் 'சஸ்பெண்டு' செய்து உத்தரவிட்டுள்ளார். அதனை ஜெயிலில் இருக்கும் சைலேசிடம் போலீசார் ஒப்படைத்தனர்.

மேலும் தலைமறைவாக இருக்கும் செந்தில் வீட்டின் முன்பு அவர் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டதற்கான தகவலை அந்த கிராம நிர்வாக அதிகாரி மூலமாக சுவற்றில் போலீசார் ஒட்டிச்சென்றனர்.

# கிராம சபைக் கூட்டங்களில் விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா? தமிழக அரசு விளக்கமளிக்க உத்தரவு






மதுரை, ஜன.27

திருச்சி துறையூரை சேர்ந்த குருநாதன், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

தமிழகத்தில் கிராம ஊராட்சிகள் சார்பில் கிராம சபை கூட்டங்கள் நடைபெறும். 7 நாளுக்கு முன்னதாக, கிராம சபை கூட்டம் நடைபெறும் நாள், இடம் குறித்து தொடர்புடையவிபரங்கள் கிராம ஊராட்சிகளில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.

கிராம சபை கூட்டம் நடைபெறும்போது, கிராம மக்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அதை ஏற்க வேண்டும். இந்த பணிகளை அந்த பகுதி தாசில்தார் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும்.

மேலும் இது குறித்து, அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என கடந்த 2018ம் ஆண்டு என ஏற்கனவே ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்தது.

ஆனால், இந்த உத்தரவை அதிகாரிகள் முழுமையாக நடைமுறைபடுத்தவில்லை. எனவே, தமிழக அரசின் ஊரக வளர்ச்சி துறை கூடுதல் தலைமை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் டீக்காராமன், விக்டோரியா கவுரி முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள், அனைத்து கிராம சபை கூட்டமும் உரிய விதிமுறைகளை பின்பற்றி நடத்தப்படுகிறதா? என தாசில்தார்கள் ஆய்வு செய்கிறார்களா? என தமிழக அரசிடம் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க அரசு வக்கீலுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# சேலம் குகையில் 3 வயது சிறுவன் சுவற்றில் அடித்துக்கொலை: கள்ளக்காதலன் கைது



சேலம், ஜன.27

சேலம் குகை பகுதியை சேர்ந்தவர் பசுபதி (வயது 26). டிரைவர். இவரது மனைவி சண்முகப்பிரியா (25). இவர்களுக்கு வெற்றிவேல் (6), மாறன் (3) என்ற இரு குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் சண்முகப்பிரியாவுக்கும், கிச்சிப்பாளையம் காளிகவுண்டர்ஹவுசிங்போர்டு பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளியான தமிழரசன் (22) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து வந்தனர்.

இதனை அறிந்த பசுபதி, 2 பேரையும் கண்டித்தார். அப்போது ஏற்பட்ட தகராறில் தமிழரசன், பசுபதியை கத்தியால் குத்தினார். இதனிடையே சண்முகப்பிரியா குழந்தைகளுடன் தமிழரசனுடன் சென்று வசித்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிளில் இருந்து மகன் மாறன் கீழே விழுந்து தலையில் அடிபட்டதாக கூறி மகனை சேலம் அரசு ஆஸ்பத்திரியில் தாய் சண்முகப்பிரியா சிகிச்சைக்கு சேர்த்தார். அப்போது சுயநினைவின்றி மாறன் இருந்ததால் அவரது உறவினர்கள் சந்தேகம் அடைந்து அன்னதானப்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இன்ஸ்பெக்டர் கண்ணன் மற்றும் போலீசார் தமிழரசனை பிடித்து விசாரித்த போது, சிறுவன் மாறன் இரவு நேரத்தில் அடிக்கடி அழுது வந்துள்ளான். இது அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்துள்ளது. இதனால் கோபம் அடைந்த தமிழரசன் சிறுவனை சுவற்றில் தூக்கி அடித்துள்ளார். இதில் மயங்கி கீழே விழுந்த சிறுவன் மீண்டும் எழுந்திருக்கவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த கள்ளக்காதலர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் இருந்து சிறுவன் கீழே விழுந்ததாக கூறி ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளது தெரிய வந்தது.

இந்த நிலையில் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் நேற்றிரவு பரிதாபமாக இறந்தான். இதையடுத்து தமிழரசன் மீது கொலை வழக்குப் பதிவு செய்த போலீசார் அவரை கைது செய்தனர்.

மேலும், மகன் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்ததாக கூறி நாடகமாடிய தாய் சண்முகப்பிரியா தலைமறைவாகி விட்டார். அவரை போலீசார் வலைவீசி தேடி வருகிறார்கள்.

# விமர்சனம் வரும்போது பொறுத்துக்கொள்ளும் மனநிலை இருந்தால் உயர முடியும் நடிகர் பார்த்திபன்



விருதுநகர், ஜன.27

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் உள்ள தனியார் பள்ளி ஆண்டு விழாவில் நடிகரும், இயக்குனருமான பார்த்திபன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

ஒரு திரைப்படத்திற்காக தேசிய விருது பெறும் போது எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோமோ, அதே போல் விமர்சனம் வரும் போதும் அதை பொறுத்து கொள்கிற மனநிலை இருந்தால் தான் தன்னால் உயர முடியும்.

"ஆடியன்சும் ஆவுடையப்பனும்" என்ற கதையை இயக்கப் போகிறேன். இந்த படத்தில் வரும் கதாபாத்திரம் திரையின் வழியாக நேரடியாக ஆடியன்ஸ் உடன் பேசுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. "டீன்ஸ் " திரைப்படம் திரையரங்கில் சரியாக ஓடவில்லை என்றாலும் ஓ.டி.டி தளங்களில் சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. "டீன்ஸ் " படத்தின் 2ம் பாகம் எடுப்பதற்கான வாய்ப்பு உள்ளது. புதிய பாதை திரைப்படத்தின் 2ம் பாகம், உள்ளே வெளியே திரைப்படத்தின் 2ம் பாகம் இயக்க உள்ளேன்.

மாணவர்களுக்கு நேரம் தவறாமை, நேரம் மேலாண்மை ஆகியவை மிகவும் முக்கியம். குறிப்பாக பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு கடின உழைப்பு முக்கியம் என்பதை விட கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கல்விதான் மாணவனின் வளர்ச்சிக்கு அடித்தளம் இடும்.

வேங்கை வயல் விவகாரத்தில் காவல்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த விவ காரத்தில் காவல்துறையினர் துரிதமாக செயல்பட வேண்டும். தமிழகத்தில் ஒவ்வொரு கட்சியும் ஆட்சி செய்யும் போது எதிர்க்கட்சிகள் நிறைய எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றன. பின்னர் ஆளுங்கட்சி எதிர்கட்சியாக வரும்போது அதே எதிர்ப்புகளை தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தை எதிர்ப்பதை விட ஆதரித்து நல்ல விஷயங்களை வாங்கிக் கொள்வது நல்லது. மேலும் ஆளுங்கட்சியை கண்மூடித்தனமாக ஆதரிக்காமல் அவர்கள் குற்றம் செய்யும் போது அதை சுட்டிக் காட்ட வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமை. டங்ஸ்டன் விவகாரத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியின் வெற்றி என்பது முழுக்க முழுக்க மக்களுக்கான வெற்றி. தனியாக ஒரு கட்சியோ அல்லது தனிப்பட்ட மனிதரின் வெற்றியோ என கொண்டாடுவதற்கான விஷயமாக டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தை பார்க்க முடியாது. தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகளுக்காக நடிகர் சங்கம் உண்ணா விரத போராட்டங்களில் ஈடுபட்டபோது அதில் வெற்றி கிடைக்காமல் போனதால் நடிகர்கள் சோர்வடைந்து போகிறார்கள். எந்த ஒரு விவகாரத்திலும் நடிகர்கள் பேசும் போது நடிகர்கள் பேசுவதை கவனிக்கிறார்களே தவிர அந்த பிரச்சனையை கவனிப்பதில்லை.

பரந்தூர் விமான நிலையம் குறித்து நடிகர் சங்கம் போராட்டம் நடத்துவதை விட அந்த விவகாரத்தில் தமிழக அரசு தீர்வு காண்பது தான் நல்லது.

பரந்தூர் விமான நிலைய விவகாரத்தில் த.வெ.க. தலைவர் விஜய் அங்கு சென்ற பின்னால் மக்களின் சப்போர்ட் நடிகர் விஜய்க்கு முழுமையாக செல்லும் போது அந்த விவகாரத்தில் அரசாங்கம் நினைப்பதை செய்ய முடியாமல் போகும்போது விஜய்யை போராட்ட களத்திற்கு செல்லவிடாமல் தடுத்தது இயல்பான விஷயம் தான். விஜய்யை பரந்தூர் விமான நிலைய விவகாரத்தில் போராட்ட களத்திற்கு அனுமதிக்கப்படாததற்கு உச்சத்தில் இருப்பவர்கள் தங்களை தற்காத்துக் கொள்வதற்காக எந்த கட்சியாக இருந்தாலும் செய்கின்ற விஷயம் தான். இதனை மீறி ஜெயிக்க வேண்டியது புதிதாக வருபவர்களுக்கான மிகப்பெரிய பொறுப்பாகவும் கடமையாகவும் இருக்கும்.

# போதை ஊசியுடன் 2 வாலிபர்கள் கைது





திருப்பூர், ஜன.27

திருப்பூரில் வலி நிவாரண மாத்திரைகளை போதைக்கு பயன்படுத்துவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. மாநகரம் முழுவதும் போலீசார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் பழனியம்மாள் பள்ளிக்கு எதிரே உள்ள காட்டுப்பகுதியில் 2 பேர் சந்தேகத்துக்கு இடமாக அமர்ந்து இருந்தனர். அங்கு சென்ற தெற்கு போலீசார் 2 பேரையும் பிடித்தனர். அவர்களிடம் போதை ஊசி மற்றும் வலி நிவாரண மாத்திரைகள் இருந்தன.

விசாரணையில் அவர்கள் பெரிய தோட்டத்தை சேர்ந்த முகமது பைசல்(வயது 25), முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் பகுதியை சேர்ந்த சதாம் உசேன்(35) என்பதும், பனியன் நிறுவனத்தில் டெய்லராக வேலை செய்து வரும் இவர்கள், ஆன்லைன் மூலமாக வலி நிவாரண மாத்திரைகளை மொத்தமாக வாங்கி அதில் இருந்து போதை மருந்து தயாரித்து ஊசி மூலம் உடலில் ஏற்றி போதைக்கு பயன்படுத்தியது தெரியவந்தது.

மேலும் போதை ஊசிகளையும் மற்றவர்களுக்கு விற்பனை செய்ததும் கண்டறியப்பட்டது. அவர்களிடம் இருந்து 30 மாத்திரைகள் மற்றும் போதை ஊசிகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்து முகமது பைசல், சதாம் உசேன் ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்தனர். இவர்களிடம் போதை ஊசி வாங்கியவர்களின் விவரங்களை பெற்று, போலீசார் ரகசியமாக விசாரித்து வருகிறார்கள்.

# தென்னை மரங்களை சேதப்படுத்திய காட்டு யானைகள்: சாலையில் ஓடிய யானையால் பரபரப்பு


வடவள்ளி, ஜன.27

கோவை போளுவாம்பட்டி வனசரகத்திற்குட்பட்ட வனப்பகுதிகளில் காட்டு யானைகள் உள்ளன.

இந்த யானைகள் அவ்வப்போது உணவு மற்றும் தண்ணீர் தேடி வனத்தை விட்டு வெளியேறி ஊருக்குள் புகுந்து வருகின்றன. அவ்வாறு வரும் யானைகள் விளை நிலங்களை சேதப்படுத்துவது தொடர்கதையாக உள்ளது.

இந்த நிலையில் நேற்றிரவு வனத்தை விட்டு 8 காட்டு யானைகள் வெளியேறி வெள்ளருக்கம்பாளையம் பால்காரர் தோட்ட பகுதிக்குள் புகுந்தது. அந்த பகுதியில் சுற்றி திரிந்த யானை, அருகே உள்ள பகுதிகளுக்குள்ளும் புகுந்து சுற்றி திரிந்து வந்தன. பின்னர் வண்டிகாரனூர் பகுதிக்குள் சென்ற காட்டு யானைகள், அங்குள்ள நந்தகுமார் என்பவரின் தோட்டத்திற்குள் புகுந்தது. அங்கு தென்னை மரங்கள் மற்றும் போர்வெல் மோட்டார் பைப்புகளை சேதப்படுத்தி சென்றது. இதேபோல் பூந்தோட்டம் அருகே செந்தில் என்பவருக்கு சொந்தமான தோட்டத்திற்குள் மற்றொரு 2 காட்டு யானைகள் புகுந்தது. அங்கு சிறிது நேரம் சுற்றிய காட்டு யானைகள், கோடாங்கி பள்ளம் வழியாக வடக்கு நோக்கி சென்றது. இந்த நிலையில் இன்று காலை 6.30 மணியளவில் அந்த பகுதியில் சுற்றிய ஒற்றை காட்டு யானை, வனத்தை நோக்கி சென்றது. அப்போது அந்த பகுதியில் உள்ள ஒருவர், சாலையில் யானை நடந்து வருவதை பார்த்ததும் ஓட்டம் பிடித்தார். யானையும் அவரை துரத்தி சென்றது. அவர் பாதுகாப்பான இடத்திற்குள் சென்று தஞ்சம் அடைந்தார். அதன்பின்னர் யானை அங்கிருந்து சென்று விட்டது. இந்த சி.சி.டி.வி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: அமெரிக்க வீராங்கனை மேடிசன் கீஸ் சாம்பியன்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர்பிரிவில் இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா அமெரிக்காவின் மேடிசன் கீஸ் உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய மேடிசன் கீஸ் 63, 26 , 75 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார் . இதனால் மேடிசன் கீஸ் சாம்பியன் பட்டம் வென்றார் . இது மேடிசன் கீஸின் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும் .

# ரஞ்சி கோப்பை: மும்பை அணியை வீழ்த்தி வரலாறு படைத்த ஜம்மு காஷ்மீர்



90வது ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் லீக்கில் மோதுகின்றன. இதில் தற்போது 6வது கட்ட லீக் ஆட்டங்கள் பல்வேறு நகரங்களில் நடந்து வருகின்றன. அந்த வரிசையில் மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில் ரோகித், ஜெய்ஸ்வால் அடங்கிய மும்பை ஜம்மு காஷ்மீர் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி முதல் இன்னிங்சில் 33.2 ஓவர்களில் 120 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஷர்துல் தாகூர் 51 ரன்கள் அடிக்க, ஜம்முகாஷ்மீர் தரப்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் உமர் நசிர் மிர், உத்விர் சிங் தலா 4விக்கெட்டுகள்சாய்த்தனர். இதைத்தொடர்ந்துமுதல்இன்னிங்சை தொடங்கிய ஜம்முகாஷ்மீர் அணி முதல் நாள் ஆட்ட நேரம் முடிவில்42ஓவர்களில்7விக்கெட்டுக்கு174ரன்கள்அடித்திருந்தது.

பரஸ் தோக்ரா 19 ரன்களுடனும், யுத்விர் சிங் 2 ரன்களுடனும் களத்தில் இருந்தர். மும்பை தரப்பில் மோகித் அவஸ்தி 3 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார். இதனையடுத்து 2வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த ஜம்மு காஷ்மீர் அணி முதல் இன்னிங்சில் 46.3 ஓவர்களில் 206 ரன்களில் ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஷுபம் கஜுரியா 53 ரன்கள் அடித்தார். மும்பை தரப்பில் மொகித் அவஸ்தி 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 86 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய மும்பை அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ரோகித் சர்மா (28 ரன்கள்) மற்றும் ஜெய்ஸ்வால் (26 ரன்கள்) ஒரளவு நல்ல தொடக்கம் கொடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர். பின்னர் களமிறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க மும்பை அணி தடுமாறியது. குறிப்பாக முன்னணி வீரர்களான ரஹானே (16 ரன்), ஸ்ரேயாஸ் ஐயர் (17 ரன்), ஷிவம் துபே (0) ஆகியோர் தாக்குப்பிடிக்கவில்லை.

இந்த இக்கட்டான நிலையில் தனுஷ் கோட்டியான் ஷர்துல் தாகூர் ஜோடி சேர்ந்து அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷர்துல் தாகூர் சதமும், தனுஷ் கோட்டியான் அரைசதமும் அடித்தனர். 2வது முடிவில் மும்பை அணி 67 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 274 ரன்கள் எடுத்து 188 ரன் முன்னிலை பெற்றுள்ளது. ஷர்துல் தாகூர் 113 ரன்களுடனும், தனுஷ் கோடியன் 58 ரன்களுடனும் களத்தில் இருந்தனர் .இன்று 3வது நாள் ஆட்டம் நடைபெற்றது

தொடர்ந்து விளையாடிய மும்பை அணியின் ஷர்துல் தாகூர் 119 ரன்களிலும் , தனுஷ் கோடியன் 62 ரன்களிலும் ஆட்டமிழந்தனர் . இதனை தொடர்ந்து வந்த வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர் . இதனால் மும்பை அணி 290 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் 205 ரன்கள் ஜம்மு காஷ்மீர் அணிக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து விளையாடிய ஜம்மு காஷ்மீர் அணி சிறப்பாக விளையாடி 5 விக்கெட் இழப்பிற்கு 207 ரன்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரஞ்சி கோப்பையின் நடப்பு சாம்பியன் மும்பையை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தி வரலாறு படைத்துள்ளது ஜம்மு காஷ்மீர். குரூப் ஏ பிரிவில் ஜம்மு காஷ்மீர் அணி முதலிடத்தில் உள்ளது.

# 2024ம் ஆண்டின் சிறந்த ஆண்கள் டி20 கிரிக்கெட் அணி; 4 இந்திய வீரர்களுக்கு இடம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒருநாள், டி20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. ஆண்டு முழுவதும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்ட விதத்தை கணக்கில் கொண்டு இந்த கவுரவத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதன்படி கடந்த ஆண்டின் (2024) சிறந்த ஆண்கள் டி20 போட்டிக்கான அணியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இந்த அணியில் இந்தியாவை சேர்ந்த 4 வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். அதன்படி இந்த அணியின் கேப்டனாக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

2024ம் ஆண்டின் சிறந்த ஆண்கள் டி20 அணி விவரம் பின்வருமாறு:

ரோகித் சர்மா (இந்தியா), டிராவிஸ் ஹெட் (ஆஸ்திரேலியா), பில் சால்ட் (இங்கிலாந்து), பாபர் அசாம் (பாகிஸ்தான்), நிக்கோலஸ் பூரன் (வெஸ்ட் இண்டீஸ் ) , சிக்கந்தர் ராசா (ஜிம்பாப்வே), ஹர்திக் பாண்டியா (இந்தியா) , ரஷித் கான் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹசரங்கா (இலங்கை), ஜஸ்பிரித் பும்ரா (இந்தியா) , அர்ஷ்தீப் சிங் (இந்தியா).

# ரசிகர் பாடிய 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' பாடலை கேட்டு ரசித்து பாராட்டிய அஜித்



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்துள்ளார். மகிழ் திருமேனி இயக்கிய இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருக்கிறார். இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஒளிப்பதிவு பணிகளை ஓம் பிரகாஷ் மேற்கொள்ள, படத்தொகுப்பு பணிகளை என்.பி. ஸ்ரீகாந்த் மேற்கொண்டுள்ளார்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இந்தப் படம் அடுத்த மாதம் 6ம் தேதி வெளியாகவுள்ளது. விடாமுயற்சி படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து வெளியான சவதீகா மற்றும் பத்திக்கிச்சி ஆகிய இரண்டு பாடல்களும் நல்ல வரவேற்பை பெற்று வருகின்றன.

இந்நிலையில், துபாயில் நடிகர் அஜித்திடம் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' பாடலை அசத்தலாக பாடிய ரசிகரின் வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது. ரசிகர் அழகாக பாடுவதை புன்னகையுடன் வியந்து கேட்டு ரசித்த அஜித் அவரை பாராட்டினார். பின்னர் ரசிகரின் பெயரை கேட்க அவர் அஜித் என கூற, இருவரும் சிரித்தவாறு கட்டியணைத்தனர்.இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. நடிகர் அஜித் நடிப்பில் 2000ல் வெளியான 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படம் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பைப் பெற்றது.

துபாயில் நடந்த 24ஹெச் சீரிஸ் கார் பந்தயத்தில் 'அஜித் குமார் ரேசிங் அணி' மூன்றாவது இடம் பிடித்து அசத்தியது. தனது அணி மூன்றாவது இடம்பிடித்த நிலையில், நடிகர் அஜித் குமார், இந்திய தேசியக் கொடியுடன் வலம் வந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இதனைத்தொடர்ந்து, போர்ச்சுகலில் நடைபெற்ற தெற்கு ஐரோப்பிய போர்ஷே ஸ்பிரிண்ட் தொடரின் தகுதி சுற்றில் நடிகர் அஜித்குமார் தகுதி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# 'ரெட்ட தல' படத்திற்கான டப்பிங் பணியை நிறைவு செய்த அருண் விஜய்

1995ல் வெளியான 'முறை மாப்பிள்ளை' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகனாக அறிமுகமானவர் அருண் விஜய். கவுதம் மேனன் இயக்கிய 'என்னை அறிந்தால்' படத்தில் அஜித்துக்கு வில்லனாக ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றார். இவரது நடிப்பில் பொங்கல் பண்டிகையில் வெளியான வணங்கான் திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து இவர், கிரிஷ் திருக்குமரன் இயக்கத்தில் 'ரெட்ட தல' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் அருண் விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கிறார். ஏற்கனவே இவர் தடம் திரைப்படத்தில் இரட்டை வேடங்களில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தில் தான்யா ரவிச்சந்திரன், சித்தி இத்னானி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். பிடிஜி யுனிவர்சல் நிறுவனம் தயாரிக்க சாம். சி.எஸ் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

ஏற்கனவே இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் முழுவதும் நிறைவடைந்த நிலையில், தற்போது இப்படத்திற்கான டப்பிங் பணிகளை நடிர் அருண் விஜய் நிறைவு செய்துள்ளார். இந்த டப்பிங் பணியின் போது எடுத்த புகைப்படங்களை தயாரிப்பு நிறுவனம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில் இப்படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவித்துள்ளது.

# அடுத்த படத்தின் அப்டேட் கொடுத்த இயக்குநர் ராஜமவுலி!

தெலுங்கு திரையுலகின் முன்னணி இயக்குனரான ராஜமவுலி, ஆர்.ஆர்.ஆர். திரைப்படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து நடிகர் மகேஷ் பாபுவை வைத்து "எஸ்எஸ்எம்பி 29" படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் நடிப்பதற்காக நடிகர் மகேஷ் பாபு தனது தோற்றத்தை மாற்றி வருகிறார். மேலும், இப்படத்திற்கு பிரபல இசையமைப்பாளர் எம். எம். கீரவாணி இசையமைக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த படம் ஆக்சன், அட்வென்ச்சர் ஜானரில் இருக்கும் என்றும் இந்த படத்தின் கதை உலகம் முழுவதும் வெவ்வேறு இடங்களில் நடப்பதாக அமைக்கப்பட்டுள்ளது என்று ராஜமவுலி தெரிவித்திருந்தார். மேலும், இப்படத்திற்கான ஸ்கிரிப்ட் எழுதும் பணி நிறைவடைந்துவிட்டதாகவும், இதன் படப்பிடிப்பை வரும் ஏப்ரல் மாதத்தில் துவங்கும் என்றும் கூறப்படுகிறது.

அமேசான் காடுகளை மையமாக வைத்து இப்படத்தின் கதை அமைந்துள்ளது. இப்படத்தை இரண்டு பாகங்களாக வெளியிட ராஜமவுலி திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்தில் பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா நாயகியாக நடிக்க இருப்பதாக வெளியான தகவல்கள் உறுதியாகியுள்ளன. இந்நிலையில் இப்படம் பற்றி ராஜமவுலி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சிங்கம் ஒன்று கூண்டில் இருக்கும் புகைப்படத்தை ராஜமவுலி பார்த்தபடி நிற்கிறார். பின் தனது கையில் பாஸ்போர்ட் ஒன்றை அவர் காட்டுகிறார். மகேஷ் பாபுவை சமீப காலங்களில் ரசிகர்கள் லயன் என்று அழைத்து வருகிறார்கள். தனது படத்திற்கு மகேஷ் பாபுவின் கால்ஷீட் பெற்றுள்ளதைதான் ராஜமவுலி இப்படி சிம்பாலிக்காக சொல்கிறார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.